## நகர செயற்திட்ட தயாா்ப்படுத்தல் வசதி செயற்திட்டம் - 2023

----------------------------------------------------------------------------------------------------------------

நகர செயற்திட்ட தயார்ப்படுத்தல் செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 சனவரி 17 ஆம் திகதிய 3706 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.02 (அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு செயற்திட்டத்தை அமுல்படுத்தும் முகவராண்மை நிறுவனம் ஆகும். முன்னுரிமை நகர செயற்திட்டங்களிற்காக உயர் மட்ட தயார்நிலையை அடைந்துகொள்வதே செயற்திட்டத்தின் நோக்கமாகும்.

கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 1,090.98 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 5.74 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 883.88 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 4.65 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதித் தொகை ரூபா 207.10 மில்லியனை இலங்கை அரசாங்கத்திடமிருந்து நிதியீட்டம் செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 மார்ச் 06 ஆம் திகதி ஆரம்பித்திருந்ததுடன், 2022 மார்ச் 31 ஆம் திகதியளவில் பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் வெளிநாட்டு வள திணைக்கத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2020 ஆகஸ்ட் 18 ஆம் திகதி இலக்கம் ER/AB/US/01(vol i) என்ற கடிதத்தின் பிரகாரம் அந்த செயற்திட்டத்தின் செயல்நடவடிக்கைகள் யாவும் 2020 ஆண்டின் இறுதியின் போது நிறுத்தப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்ட நடவடிக்கைகள் 2022 மார்ச் 31 முதல் மீண்டும் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் 2022 ஏப்ரல் 27 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி 2024 மார்ச் 31 ஆம் திகதி வரை மீண்டும் நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| விதிகள் மற்றும் பிரமாணங்களுடான தொடர்பு | இணங்காமைகள்/ கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் 2019 யூலை 25 ஆந் திகதிய SC&PMU/Grant/19 ஆம் இலக்க சுற்றறிக்கை | இலங்கை அரசாங்கத்திற்கு கிடைக்கின்ற சகல வெளிநாட்டு மானியங்களும் மற்றும் தொழில்நுட்ப ரீதியான உதவிகளுக்காகவும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். எனினும் செயற்திட்டத்திற்காக கிடைத்த ஐக்கிய அமெரிக்க டொலர் 01 மில்லியன் தொழில்நுட்ப ரீதியான உதவிக்காக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படாதிருந்ததுடன் இந்த தொழில்நுட்ப ரீதியான உதவி மானியத்திற்குரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சு உடன்படிக்கையில் கைச்சாத்திட வில்லை. | இலங்கை அரசாங்கத்திற்கு கிடைக்கின்ற கல வெளிநாட்டு மானியங்கள் மற்றும் தொழில்நுட்ப ரீதியான உதவிகளுக்காக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| போக்குவரத்து நெரிசல் மற்றும் அசைவுகளுக்காக 13 ஆலோசனை அறிக்கைகள், நகர அபிவிருத்தி செய்தல் மற்றும் மரபுரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் இயலளவைக் கட்டியெழுப்புவதற்கான 04 ஆலோசனை அறிக்கைகள் மற்றும் சுற்றாடல் முகாமைத்துவ சேவைகளுக்கான 05 ஆலோசனை அறிக்கைகள் ஆக முதலாவது மற்றும் இறுதி அறிக்கைகளைத் தயாரிப்பதற்காக மூன்று தனியார் கம்பனிகளுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த ஆலோசனை அறிக்கை தொடர்பாக செயற்திட்டம் எந்தவொரு செயல் முன்னேற்றத்தையும் பெற்றிருக்கவில்லை. | ஆலோசனை ஒப்பந்தங்களின் கிரயம் மற்றும் காலத்தின் அடிப்படையாகக் கொண்ட ஒப்பந்தங்களின் தன்மையின் காரணமாக சமர்ப்பிக்கப் படாத ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு அமைச்சிற்கு கோரப்பட்டிருக்கவில்லை. | ஆலோசனை அறிக்கை கால எல்லையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 செயற்திட்டங்ளின் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதில் தாமதம்

| கூறு | செயற்பாடுகள் | 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு | | தாமதம்/ கணக்காய்வு அவதானிப்பு | தாமத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | | ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட திகதியில் அறிக்கைகளின் எண்ணிக்கை | தாமத மாதங்கள் | | |
| ஆலோசனை வேலைகள் | | | | | |
| | செயற்திட்டப் பட்டியலின் உறுதிப்படுத்தல் | 2022 திசெம்பர் | 12 | ஆலோசனை அறிக்கை சமர்ப்பிப்பதில் தாமதம் | கால அட்டவணை மாற்றப்பட்டுள்ளது. |
| | சாத்தியவள ஆய்வு அறிக்கை தயாரித்தல் | 2023 மார்ச் | 09 | | |
| | விரிவான செயற்திட்ட அறிக்கை தயாரித்தல். | 2023 செப்டம்பர் | 03 | | |
| | O & M திட்டம் தயாரித்தல். | 2023 நவம்பர் | 01 | | |

**முகாமைத்துவத்தின் பதில்**

நிதி அமைச்சின் கீழ் UPPF செயற்குழு ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் குழு அதன் முடிவுத் திகதியான 2023.10.31 வரை தயாரிக்கும் நடவடிக்கைகளுக்காக தொழில்நுட்ப ரீதியான உதவிகளை வழங்குமாறு ADB இலிருந்து கோரி இருந்தது. அதனால் கால அட்டவணை அதன் பிரகாரம் மாற்றப்பட்டுள்ளது.

**கணக்காய்வாளரின் பரிந்துரை**

வேலைத் திட்டத்தின் பிரகாரம் வேலையினைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

## 3.3 ஒப்பந்த நிருவாகம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டம் மீண்டும் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன் செயற்திட்டத்தின் முன்னைய விடயப் பரப்பு மாற்றப்பட்டு 2024 மார்ச் 31 ஆந் திகதி வரையில் பூர்த்தி செய்வதற்கு முன்மொழியப்பட்டு திருகோணமலை மற்றும் தம்புள்ளை பிரதேசங்களில் கீழ் ஏனைய விடயப் பரப்புக்களுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனினும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் இலக்கினை அடைந்து கொள்ளல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமையால் செயற்திட்டத்தின் கால நீடிப்பின் கீழ் செயற்திட்ட செயற்பாடுகளைப் பூர்த்தி செய்தல் கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்தது. | மிகுதி வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக 2024.03.31 முதல் 2024.12.31 வரை காலத்தை நீடிக்குமாறு செயலாளர், MUD இனால் ADB இன் நிதி கோரப்பட்டுள்ளது.<br><br>கால நீடிப்புக்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற போது ஆசிய அபிவிருத்தி வங்கியினால் 2024.03.31 வரை UPPF கடன் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. மேற்குறிப்பிடப்பட்ட செயற்திட்ட செயற்பாடுகளின் அடிப்படையில் தாமதம் ஏற்பட்டிருந்தது. | குறித்துரைத்த கால எல்லையில் வேலைகளை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2024 மார்ச் 31 ஆந் திகதி வரையும் செயற்திட்ட செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 வரை 10 செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மேலும் விரிவான நிர்மாண செயற்திட்டங்கள் திட்டமிடப்படுகின்றது. UPPF இன் கடன் மூடப்பட்டதன் காரணமாக UPPF இன் காலம் நீடித்தல் தொடர்பாக எதிர்பார்க்கப்பட்ட தீர்மானத்தின் காரணமாக ஆசிய அபிவிருத்தி வங்கி இந்த இணக்கப்பாட்டை வழங்கியிருக்கவில்லை. | வேலைத் திட்டத்தின் பிரகாரம் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இந்த செயற்திட்டத்திற்காக தம்புள்ள, திருகோணமலை, குருணாகல் மற்றும் இரத்தினபுரி என்ற நகரங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக 2019 முதல் 2022 திசெம்பர் 31 வரை 03 கூறுகளின் கீழ் ரூபா 418.29 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டின் போது செயற்திட்டம் கைவிடப்பட்டமையால் 2024 மார்ச் 31 வரை செயற்திட்டம் நீடிக்கப்பட்ட காலம் நீடிக்கப்பட்டதன் பின்னர் செயற்திட்ட விடயப் பரப்பு மாற்றப்பட்டு திருகோணமலை மற்றும் தம்புள்ளை மாவட்டங்களுக்கு மாத்திரம் முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தது.<br>காண்பிக்கப்பட்ட செயற்திட்டத்தின் மூலம் செலவிடப்பட்டுள்ள மொத்த தொகை பயனற்ற செலவினமாக கணக்காய்வில் இனங்காணப்பட்டது. | நிதி அமைச்சின் ஆலோசனையின்படி செயற்திட்டங்களை மீண்டும் செயற்படுத்தும் போது திருகோணலை மற்றும் தம்புள்ளை பிரதேசங்களில் சுற்றுலா வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அமைச்சில் இலங்கை அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு இணங்க வேண்டியிருந்தது. அதனால் குருணாகல் மற்றும் தம்பள்ளை செயற்திட்டங்களைத் தயாரிக்கும் நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட செலவினம் தொடர்பாக அமைச்சிற்கு விடயங்களை காண்பிப்பதற்கு முடியாதிருந்தது. | செயற்திட்டத்திற்குரிய நடவடிக்கைகளுக்காக மாத்திரம் திட்டங்களுடன் செலவினத்தை செய்வதற்கு கவனம் செலுத்துதல் வேண்டும். |

## 3.5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| செயற்திட்டத்தை மீண்டும் அமுல்படுத்தும் போது முன்னைய ஆலோசனை அறிக்கைகளின் பயன்பாடு தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை கவனத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்திட்டத்தின் கீழ் இனங்காணப்பட்ட அண்மைக்கால அபிவிருத்தி பங்குபற்றகளுக்காக முன்னைய பணிகளை பயன்படுத்துதல் மிகவும் பிரச்சினைக்குரியதாகும். செயற்திட்டத்தின் விடயப் பரப்பை மீண்டும் மாற்றுதல் இலங்கை அரசாங்கத்தின் ஒட்டுமொத்த தீர்மானமாகும். | முன்னைய ஆலோசனை அறிக்கை ஆக்கபூர்வமான வகையில் பயன்படுத்துதல் வேண்டும். |